Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 3-00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆடி மீ 16 ஆம் உ புதன்கிழமை (01 - 08 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 09 ஓசை 164

## சிங்கள ஊர்காவற்படையால் நான்குமுஸ்லிம்கள் கொலை

(வவுனியா)

மதவாச்சியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கைது செய்த நான்கு முஸ்லிம் மக்சளை சிங்கள ஊர் காவற்படையினர் கொலை செய்தனர். இதனால் பீதியடைந்த அப்பகுதி முஸ்லிம் மக்கள் புத்தளத் திற்கு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்த 27ஆம் திகதி அன்று வவுனியாவிலுள்ள அகதிமுகாமுக்கு உணவுப் (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஈரோஸ் அமைப்பு கலைப்பு!

## விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து போராட முடிவு!

(யாழ்ப்பாணம்)

''ஈழவர் புரட்சி அமைப்பு'' (ஈரோஸ்) அதன் அரசியல் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணி ஆகியவற்றைக் கலைப்பதாக அதன் பொதுச்சபை தீர்மானித் துள்ள அதேவேளை, அவ் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் விடுதலைப் புலிக ளுடன் சேர்ந்து தமிழீழ விடுதலைக்குப் போராடத் தீர்மானித்திருப்பதாகவும் ஈரோஸ் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

பாராளுமன்றத்தில் வடக்கு கிழக்கு மாகாணப் பிரதிநிதி களாக அங்கம் வகித்து வந்த ஈரோஸின் அரசியல் கட்சிப் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணியின் பிரதிநிதிகள் அனைவரும் கடந்த இருப தாம் தேதி தமது பாராளு மன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமாச் செய்துகொண் டது தெரிந்ததே.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியைராஜினாமாச்செய்து ஈழவர் ஜனநாயக முன்னணி பாராளுமன்றக் குழுத் தலை (4ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் தொகை 50,000 மேல்

(சென்னை)

அண்மைக்காலத்தில் தமிழ கம்வந்துள்ள இலங்கைத்தமிழ் அகதிகளின் எண்ணிக்கை ஐம் பதாயிரத்தை தாண்டிவிட்ட தாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

1985-89 பகுதியில் வந்த (4ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதியின் பயணம் ரத்து

(சென்னை)

தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி நேற்று செவ் வாய்க்கிழமை டில்லி செல்ல விருந்த பயணம் ஒத்தி வைக் கப்பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பெண் போராளி வீர மரணம்

பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதலால் விடுதலைப்புலி களின் மகளிர் அணியைச் சேர்ந்த சிவமதி (மனோகர நாதன் - பவானி ஆலங்கேணி) வீரமரணம் அடைந்துள்ளார். அவருக்கு தமது வீரவணக்கத் தை விடுதலைப்புலிகள் தெரி வித்துள்ளனர்.

## 15 தமிழர் படுகொலை

சிறிலங்கா அரச படையின ரால் திருமலையில் பதி னைந்து அப்பாவித் தமிழ் மக் கள் வெட்டிக் கொல்லப்பட் டுள்ளார்கள்.

## யாழ். கோட்டைக்குள்

## தமிழ்ப் பொலிஸார் மீது இராணுவத்தினர் சூடு?

(கொழும்பு)

யாழ்ப்பாணம் கோட்டைக் குள் விடுதலைப்புலிகள் நடத் திய தாக்குதலில் இரண்டு பொலிஸ்காரர் கொல்லப் பட்டதாகவும் மற்றும் மூவர் காயமடைந்ததாகவும் பாது காப்பு அமைச்சு நேற்றுக் காலை அறிவித்தது.

யாழ். கோட்டைக்குள் சிங் கள இராணுவத்தினர் பெரு (4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் பத்தாம் கட்டையில் புலிகள் - இராணுவம் மோதல்

### 5இராணுவம் பலி; 1போராளி வீரமரணம்

(மன்னார்)

முருங்கனில் இருந்து பத் தாம் கட்டைக்கு முன்னேறிச் செல்ல முயன்ற இராணுவத் தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்று மன்னார் சிலாபத் துறை இராணுவமுகாமில் இருந்து 4 வாகனங்களில்முருங் கன் வந்த இராணுவத்தினர் அங்கிருந்துபத்தாம்கட்டைக்கு முன்னேறிச் செல்லும் போது பத்தாம் கட்டையில் வைத்து விடுதலைப்புலிகள் தாக்குத லை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் ஐந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். விடு (4ஆம் பக்கம் பர்க்க)

## திங்கள் வந்த கப்பல் இன்று திரும்புகிறது

### மீண்டும் பெரிய கப்பல் வருமாம்!

(யாழ்ப்பாணம்)

உணவுப் பொருள்களுடன் பருத்தித்துறைத் துறைமுகத் துக்கு நேற்று முன்தினம் நண்பகல் வந்த கப்பல் சரக் குகளை இறக்கிவிட்டு இன்று கொழும்புக்குத் திரும்புகிறது. இந்தச் சிறிய கப்பல் திரும் பிச் செல்லும்போது தபால் பொதிகளை ஏற்றிச் செல்லு மாம்.

**மீண்டும் மா**

இன்று திரும்பிச் செல்லும் இக்கப்பல் மீண்டும் திருக் கோணமலை பிறிமா மாவா (4ஆம் பக்கம் பார்க்க)

## படையும் ஊர்காவல் படையும் முஸ்லிம்கள் மீது தாக்குதல்!

(வவுனியா)

ஸ்ரீலங்கா இராணுவத்தினா லும் ஊர்காவற்படையினரா லும் கல்லூரில் பல முஸ்லிம் கள்மிருகத்தனமானமுறையில் தாக்கப்பட்டுள்ளனர். ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் பலர் அடிகாயங்களுக்கும், வெட்டுக் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் சித்திர வதைக்குள்ளாக்கப் பட்டபின் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளானவர்க ளில் சின்னச்சிப்பிக்குளத்தைச் சேர்ந்த ஏ. நாகூர் மீரான் (வயது 40) என்பவர் கொடூர மான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். என். (4ஆம் பக்கம் பார்க்க)

## 60 க்கு மேற்பட்ட வீடுகள் 10 கடைகள் சேதம்

(விசேட நிருபர்)

நேற்று முன்தினம் (30.7.90) இரவு ஸ்ரீலங்கா விமானப் படை குண்டுவீச்சு விமானங் கள் குடிமக்கள் வாழும் பகுதி களில் குண்டு வீச்சு நடத்திய தில் அறுபதுக்கும் மேற்பட்ட வீடுகளும், பத்துக்கும் மேற் பட்ட கடைகளும் சேதமடை ந்துள்ளன.

குருநகர், கடற்கரைவீதி, அறிஞர் அண்ணா, மக்கள்தில கம் எம். ஜி ஆர் சிலைக்கும் சமீபமாக வீழ்ந்த குண்டால் டொமினிக், ஜேக்கப், எட் (4ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பத்துக்கு 1 கிலோ அரிசி 1கி.மா, ஆளுக்கு 100கிராம்சீனி

### பங்கீட்டுமுறையில் கிடைக்கும் பேக்கரிகளுக்கு மா கிடையாது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் ஏற் பட்டுள்ள அத்தியாவசிய உணவுப் பொருள்களின் தட்டு பாட்டை குறைக்கும் வகை யிலும், சகல பகுதி மக்களுக் கும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கிடைப்பதற்காக வும் இம்முறை பாண் பேக் கரிகளுக்கு மா வழங்கப்பட மாட்டாது.

மேலும் கப்பலில் வந்த உணவுப் பொருள்கள் மக்க ளுக்குப் பங்கீட்டு அடிப்படை யிலேயே விநியோகிக்கப்படும் என்றும் யாழ். அரசாங்க அதி பர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி யாழ். அரசாங்க (4ஆம் பக்கம் பார்க்க)

## லைபீரியாவில் அகதிமுகாமில் இராணுவம்சுட்டு 600பேர் பலி

(மன்றோலியா)

லைபீரியாவின் தலைநகர் மன்றோலியாவில் உள்ள தேவாலய அகதிமுகாம் ஒன்றி னுள் இராணுவத்தினர் சென்று சுட்டதில் 600 பேர் வரை மாண்டனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பெண்களும், குழந்தைகளுமே அதிகம் இறந்துள்ளனர்.

இச்சம்பவத்தை நேரில் கண்ட ஏனைய அகதிகளே இத்தகவல்களைத் தந்துள்ள னர்.

கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆதரவு கொடுத்தார்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

## துரிதமாக பொருள்களை இறக்குமாறு கப்டன் மிரட்டல்

(முல்லைத்தீவு)

''துரிதப்படுத்தி சாமான் களை இறக்காவிட்டால் கப் பலை பருத்தித்துறைக்கு கொண்டு சென்றுவிடுவேன்'' என்று செஞ்சிலுவை சங்கப் பிரதிநிதிகளும், கிறிஸ்தவ மதப் பாதிரியாரும் மிரட் டப்பட்டுள்ளனர்.

உணவுப் பொருட்களுடன் வடக்கு நோக்கி வந்த சிகிரிய கப்பலின்கப்டனால் முல்லைத் தீவில் சாமான்களிறக்கப்படும் பொழுது இவ்வாறு மிரட்டப் பட்டுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை அகதிகளுக்கு உடுப்பிட்டியில் முகாம்

உடுப்பிட்டியில் இடம்பெயர்ந்தோர் முகாம் ஒன்றை உடுப்பிட்டி முதலுதவி சிகிச்சை நிலையத்தினரும் உடுப்பிட்டி சிற்றூரவையினரும் நடாத்தி வருகிறார்கள்.

இதில் திருக்கோணமலை, பலாலி, மயிலிட்டி, ஊர்காவற்றுறை பகுதியை சேர்ந்த 300க்கு மேற்பட்ட அகதிகள் தங்கியிருக்கிறார்கள்.

இவர்களுக்கு இதுவரைஎந்த பொதுஸ்தாபனங்களும் எந்தவித உதவிகளும் அளிக்கப்படாத நிலையில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஆகவே அகதிகளுக்கு உதவி புரியும் பொதுஸ்தாபனங்கள் இவ் அகதிகளை வந்துசந்தித்து அவர்கள் குறைகளை நிவர்த்தி செய்யவேண்டுமென அவர்கள் கேட்டுள்ளன.

## விசேட கூட்டம்

இலங்கை திறந்தவெளி பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் விசேட கூட்டமொன்று இன்று புதன்கிழமை காலை பத்து மணியளவில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு மாணவர்கள், முக்கியஸ்தர்கள் அனைவரையும் வருகை தருமாறு மேற்படி நிலைய மாணவர் நலன்புரி அமைப்பினர் கேட்டுள்ளனர். (20)

## பதவி நீக்கம்

(கொழும்புத்துறை)

பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க உப தலைவர் பரந்தன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் அண்மையில் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (24)

## ஹெலி தாக்கி ஒருவர் பலி

(கொழும்புத்துறை)

கைதடி மேற்கில் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் ஹெலிகப்டர்களிலிருந்து மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒருவர் பலியாகியுள்ளார். இன்னொருவர் படுகாயமுற்றார். இச் சம்பவத்தால் வீடொன்று தீக்கிரையானது.

ஞாயிற்றுக்கிழமை மாலை இப் பகுதியில் மேற் கொள்ளப்பட்ட ஹெலி தாக்குதலில் இருவர் படுகாயமுற்றனர். (24)

## ஐநூறு ரூபா போலி நோட்டுக்கள்

(கொழும்பு)

போலி ஐநூறு ரூபா நோட்டுக்கள் புளக்கத்தில் இருப்பதாகப் பொலிஸ் பகுதி அறிவித்துள்ளது.

இவை இந்தியா, தாய்லாந்தில் அச்சிடப்பட்டுள்ளதாகவும் இதில் நூற்றி நாற்பது நோட்டுக்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மானிப்பாயில் சகல 'கிளினிக்' குகளும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்குரிய சகல கிளினிக் நோயாளர்களையும் அவர்களுக்குரிய கிழமை நாட்களில் பார்வையிட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கிளினிக்குகள் காலையில் மட்டும் 8-30 தொடக்கம் 10.30 மணிவரை நடைபெறும் என்றும் நோயாளர்கள் அவர்களுக்குரிய கிழமை நாட்களில் சமுகமளிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

யாழ். வைத்தியசாலை

# சகல தரப்பு ஊழியர்களும் இன்று சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய சகலதரப்பு ஊழியர்களையும் மானிப்பாய் வைத்தியசாலையில் இன்று புதன்கிழமை கடமைக்கு சமுகமளிக்குமாறு வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி புஷ்பா சண்முகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பருத்தித்துறை, சாவகச்சேரி வைத்தியசாலையில் ஏற்கனவே பணிபுரிபவர்கள் சமுகமளிக்கத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மா)

## உப்பு அள்ளும் போது ஹெலி தாக்குதல்

(வடமராட்சி)

சோனப்பு உவர் நீர்க்கடலில் இம்முறை பெருந்தொகையான உப்பு விளைந்திருந்த போதிலும் அதனை அள்ளுவதற்கு மக்கள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

தினமும் இப்பகுதியை அண்டிய வல்லைவெளியில்ஹெலித் தாக்குதல் நிகழ்ந்து வருவதே மக்களின் தயக்கத்திற்கு காரணமாகும்.

கடந்த காலங்களில் இப் பகுதிகளில் உப்பு அள்ளுவதற்கு வடமராட்சி தென்மராட்சி உட்பட பல பாகங்களில் இருந்து பெரும்தொகையான மக்கள் வருவது குறிப்பிடத்தக்கது. (18)

## மரக்கறி விலை ஏற்றம் முட்டை விலை குறைவு

(பண்டத்தரிப்பு)

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு உள்ளூர் மரக்கறியின் விலை அதிகரித்துள்ளது. முட்டையின் விலை ரூ. 2 70 ஆகக் குறைந்துள்ளது.

கடலில் சடலங்கள் வருவதையடுத்து மீன் பாவனையும் குறைந்துள்ளதாக மீன் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (12)

## கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஆண், பெண் இருவருடைய மாணவர் அடையாளஅட்டைகள் சிறிதளவு பணம் என்பனவற்றுடன் ஓர் பேர்ஸ் நேற்று மணியந்தோட்டத்தில் கண்டு எடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து அடையாளம் கூறிப் பெற்றுச் செல்லவும்.


# இடம்மாற்றம்

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 3-8-90 வெள்ளிக்கிழமை தொடக்கம் பாஷையூர் 3-ஆம் குறுக்கு வீதி 11/3, ஆம் இலக்கக் கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. சகல ஊழியர்களும் அழைக்கப்படுகிறார்கள்.

தலைவர்,

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

(B/1300)


## வடமராட்சியில் உணவு அட்டை

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் உள்ள ஐந்து பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பகுதிகளிலும் பாவனையாளர்களுக்கு உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தஅட்டைகளை வழங்குவதில் ஏற்படும் ஒழுங்கீனங்கள் தவிர்க்கப்பட ஒழுங்குகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன.

இந்தஉணவுப் பங்கீட்டு அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தவறான விபரங்களைக் கொடுக்கும் பாவனையாளர்களுக்கு எதிராகத் தண்டனைகள் வழங்கப்படுமென்றும்அறிவிக்கப்பட்டுள்ளது(25

## ஹாட்லியின் சாதனை

(பருத்தித்துறை)

அண்மையில் வெளியான க. பொ. த.(சாதாரணதரப்) பரீட்சைப் பெறுபேறுகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் ஒரு மாணவன் எட்டுப் பாடங்களிலும் 'டி' தர சித்தியும், ஒன்பது மாணவர்கள் ஏழு பாடங்களிலும் 'டி' தர சித்தியும், பதின்மூன்று மாணவர்கள் ஆறு பாடங்களிலும் 'டி' தர சித்தியும், ஆறு மாணவர்கள் ஐந்து பாடங்களிலும் 'டி' தர சித்தியும் பெற்றுள்ளனர்.

இப்பரீட்சைக்குத் தோற்றிய 135 மாணவர்களில் 123 மாணவர்கள் க. பொ. த. (உயர் தர) வகுப்பில் அனுமதி பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர். (25)

## நிவாரணத்திற்கு பிறப்பு அத்தாட்சி பத்திரம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் சில பல நோ. கூ. சங்கங்களில் பங்கீட்டு அடிப்படையில் வழங்கும் ஐந்து வயதுக்கு உட்பட்டோருக்கான அரைக் கிலோ சீனியும் ஒரு பால்மா பைக்கற்றுக்கும் உண்மையான வயதை அறிவதற்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் முகாமையாளர்களினால் கேட்கப்படுகின்றனவாம். சிலருக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாதன்னால் தங்களது பிள்ளையின உண்மையானவயதை பிள்ளைத் பிறந்த ஆஸ்பத்திரியின் டாக்டரின் அத்தாட்சிப் பத்திரம் மூலம் காட்டி பொருட்களை பெறுகின்றனர். (43)

## முதலுதவி வகுப்புக்கள்

(வடமராட்சி)

உடுப்பிட்டித் தொகுதிக்கான போர்க்கால முதலுதவி வகுப்புக்கள் முதலுதவிப்பிரிவுத் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றுவருகின்றன.

இவ் வகுப்புக்களில் சுமார் 200 மாணவ மாணவிகள் வரை கலந்து கொண்டு வருகின்றனர். (18)

## வரலக்ஷ்மி விரதம்

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மூலநக்ஷத்திரத்தில் காலை 8-00 மணியளவில் சங்குவேலியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ வி. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் மானிப்பாய் வேம்படி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயிலில் வரலக்ஷ்மி விரத பூஜையை ஆரம்பித்து வைத்து நோன்பு நூலும் கட்டப்படும். மெய்யடியார்கள் இவ்விரதத்தில் பங்கு கொண்டு அம்பாளின் அருட்கடாட்சத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.


வரிவிளம்பரம்

## கிளீன் கட்

யாழ். மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள கிளீன் கட் நிறுவனம் தற்போது37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் றோட் (இந்து மகளிர் கல்லூரிக்கும்-நீராவியடி பிள்ளையார்கோயிலுக்கும் இடையில்) இயங்குகின்றது.

(B.1301)


# முல்லைத்தீவில் குண்டு வீச்சு வற்றாப்பளை கோயில் சேதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் கடந்த 29ஆம் திகதியும் 30ஆம் திகதியும் பல இடங்களில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இத்தாக்குதல்களால் கட்டிடங்கள், கோயில் என்பன பலத்த சேதத்திற்குள்ளாகின.

கடந்த 29ஆம் திகதி வற்றாப்பளை அம்மன் கோயிலுக்கு பொம்பர் விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல் மேற்கொண்டதில் கோயில் பலத்த சேதமடைந்துள்ளது.

மறுநாளும் மீண்டும் வற்றாப்பளை அம்மன் கோயிலுக்கு பொம்மர் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கியதில் கோயிலின் அனைத்துக் கட்டிடங்களும் முற்றாக சேதமடைந்துள்ளன.

இதைத் தொடர்ந்து அன்று முல்லைத்தீவு நகர் செயலகத்திற்கு பொம்மர் விமான மூலம் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இத் தாக்குதலினால் செயலகம் முற்றாகச் சேதமடைந்துள்ளது. (ம)

# தமிழரைக் கொன்று குவிக்கும் எண்ணம் தமக்கு இல்லையாம்

- பிரேமதாஸா

(தெரணியாகலை)

அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்து விட்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் வெற்றிகொள்ளும் எண்ணம் தமக்கு இல்லை என்று ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸா தெரிவித்துள்ளார்.

தெரணியாக்கலையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் பொழுதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அப்பாவிகளின் உயிருக்கும், உடைமைகளுக்கும் தக்க பாதுகாப்பு வழங்குமாறு படையினருக்கு தம்மால் கண்டிப்பான உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் அங்கு அவர் தெரிவித்தார்.

## நிவாரண உதவி வழங்கப்படவில்லை

(விசேடநிருபர்)

பூநகரி, கல்முனை, பந்தடி என்னும் பகுதியில் கடந்த ஒன்றரை மாதங்களாக தஞ்சம் புகுந்திருக்கும் குருநகரைச் சேர்ந்த 92 குடும்பங்களுக்கும் இதுவரை எந்த நிறுவனங்களும் நிவாரண உதவிகளை வழங்க முன்வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். அரச அதிபரால் பணிக்கப்பட்ட நிவாரண உதவிகளும் இதுவரை வழங்கப்படவில்லையாம்.

தினமும் 10 மைல்களுக்கு மேலாக கால் நடையாக அலைந்தும் உதவியைப் பெற முடியவில்லை என அகதிகள் வருத்தம் தெரிவித்தனர். (21)

## முருகனிடம் ஒரு தாயின் வேண்டுதல்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத்தை முடிவெடுக்க வந்திட்டாங்களோ முருகா! எங்கள் பொடியங்களைக் காப்பாற்றி அவங்களுக்கு வெற்றியைக்கொடு" என்று நேற்று முன்தினம் காலை யாழ். நகர்மீது சிறிலங்கா போர் விமானங்கள் வட்டமிட்டுக் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்திய சமயம் சிறிமாவோ, ஜே. ஆர்., பிரேமதாஸா ஆகியோர் வந்து வழிபட்டுச் சென்ற நல்லூர்க் கந்தனின் நான்காம் திருவிழாவின் போது கோயிலில் திரண்டிருந்த பெருந் திரளான மக்களின் மத்தியில் ஒரு தாய் மேற்கண்டவாறு உரத்த குரலில் முருகனை வேண்டிக் கொண்ட காட்சி கல் மனதையும் உருகச் செய்வதாக இருந்தது.

## அமைதிக்காக பிரார்த்தனை

(விசேடநிருபர்)

நாட்டில் அமைதி, சுபீட்சம் ஏற்பட வேண்டி தினமும் மாலை 4-30 மணியில் இருந்து 5-30 மணிவரை யாழ். வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தில் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (21)

## ரோமாபுரியில் அறிமுக விழா

(விசேட நிருபர்)

ஈழத்து எழுத்தாளர் ஜோசப் பாலாவின் 'திருப்பம்' சிறுகதைத் தொகுதியின் அறிமுக விழா கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதி ரோமாபுரியில் நடைபெற்றது.

அருட் சகோதரி சோபியாவினால் ஒழுங்கு செய்யப்பட்ட விழாவில் ரோமாபுரியில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் ஏராளமாகக் கலந்து கொண்டனர்.

நூலின் ஆய்வுரையை தலைமை வகித்த திரு. மரியதாஸ் நிகழ்த்தினார்.

வண. பற்றிக் ஞானப்பிரகாசம், வண. மங்களராஜா, திருமதி திரேசா ஆகியோர் அருட் சகோதரி சோபியாவிடம் நூலின் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். (21)

சிந்தனைக்கு

ஏமாற்றாதே ஏமாற்றாதே
ஏமாறாதே ஏமாறாதே
-கவிஞர் வாலி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 01-08-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# "பூனை கண்ணை மூடிக்கொண்டால்..."

உணவு, மருந்துப் பொருட்களை ஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் கொழும்பிலிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டுவிட்டதாக ஒரு வாரத்துக்கு முன்னரே சிறிலங்கா அரசின் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் ரூபவாஹினி தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனமும் அறிவித்தன.

சில தினங்களின் பின்னர் இரண்டு கப்பல்கள் கொழும்பிலிருந்து புறப்பட்டுத் திருக்கோணமலையிலும் முல்லைத்தீவிலும் தங்கி நிற்பதாகச் செய்தி அறிக்கை கூறியது.

உணவுக் கப்பல் புதன்கிழமை பருத்தித்துறை வந்து சேருமென்றும் வியாழன் வரும், வெள்ளி வந்துவிடும் என்றும் செய்திகள் வெளிவந்து கடைசியாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை அந்தக்கப்பல் வந்துசேர்ந்தது.

கடந்த ஜூன் மாதம் பதினோராம் தேதி வடக்கிலும் கிழக்கிலும் போர் மூண்ட பின்பு காங்கேசன்துறைக்கு மாமூடைகளுடன் வந்த கப்பல் பருத்தித்துறைக்குச் செல்வதற்கு ''வழி தெரியாமல்'' கொழும்புக்குத் திரும்பியது.

இதன் பின்னர் இப்பொழுதுதான் பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு ''வழிதெரிந்த மாலுமிகள் கிடைத்து'' உணவுக்கப்பல் ஒன்று வந்து சேர்ந்திருக்கிறது.

இந்தக் கப்பல்களும் மாலுமிகளும் கிடைக்காததால் சில லொறிகளில் பெரும்பாடுபட்டு சில பொருள்களை ''பாதுகாப்புடன்'' வடக்குக்கும் கிழக்குக்கும் அரசு பல நாள் முயற்சியின் பின்னர் அனுப்பிவைத்தது.

வடக்கிலும் கிழக்கிலும் உணவுத் தட்டுப்பாடோ மருந்துத் தட்டுப்பாடோ இல்லையென்றும் இரண்டு மாதங்களுக்குத் தேவையான மருந்துப் பொருள்களும் உணவுப் பொருள்களும் இருப்பதாக அரசாங்கம் அறிவித்தது.

வடக்கில் நிரந்தரமாக வாழ்ந்துவரும் மக்களைவிட கிழக்கிலிருந்து லட்சக் கணக்கான மக்கள் அகதிகளாக வந்துள்ளனர். இந்நிலையிலும் உணவு, மருந்துத் தட்டுப்பாடு இல்லை என்று அரசாங்கம் கூறியது.

கப்பலில் வந்திருக்கும் உணவுப் பொருள் ஒரு நாளுக்குக்கூடப் போதாது என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்திருக்கிறார்.

யாழ். மாவட்டத்தில் மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவு, மருந்துப் பொருள்கள் இருப்பதாகக் கூறும் அரசு, போர் தொடங்கிய சில நாட்களுக்குள்ளேயே யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இருப்பவர்களுக்கு உணவும் மருந்தும் இல்லையென்று கூறியது. அப்படியானால் இலங்கை இராணுவத்துக்கு முன்யோசனையும் முன் எச்சரிக்கையும் இல்லையென்று அரசாங்கம் வெளி வெளியாகச் சொல்லலாமே!

கிழக்கு மாகாணத்திலிருந்து பெரும்பாலான தமிழ் மக்கள் அகதிகளாக யாழ். குடா நாட்டுக்கு வந்து விட்டார்கள்.

வவுனியா, கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளிலிருந்து தமிழ் மக்கள் அகதிகளாக குடா நாட்டுக்கு வந்து சேர்ந்து விட்டனர். மன்னார் பகுதியிலிருந்து தமிழர்கள் தமிழ் நாட்டுக்கு அகதிகளாய்ப் போய்ச் சேர்ந்துள்ளனர்.

இந்நிலையில் முப்பத்தேழு லொறிகளில் வடக்கு கிழக்கிலுள்ள அகதிகளுக்கு உணவு, மருந்துப் பொருள்கள் ஏற்றிச் செல்லப்படுவதாக ரூபவாஹினி ஒளிக்காட்சியில் காட்டியது.

வடக்கிலும் கிழக்கிலும் இப்பொருள்கள் எந்த அகதிகளுக்குப் போய்ச் சேருகின்றன?

உலகை இப்படியெல்லாம் ஏமாற்ற முடியுமென்று சிறிலங்கா அரசு நினைக்கிறது.

வடக்குகிழக்குப் பகுதிகளில் இன்னும் பத்து நாட்களுக்குப் போதுமான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களே இருப்பதாகவும் இதன் பின் இப்பகுதியில் பட்டினி நிலை ஏற்படுமென்றும் சிறிலங்கா அரசு இதில் அக்கறையுடன் செயல்படவில்லையென்றும் இலங்கையில் தங்கி நிலைமைகளை நேரில் அவதானித்து வரும் சர்வதேச நிவாரண நிறுவனங்கள் சரியாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றன.

உலகம் விழித்துக் கொண்டு தானிருக்கிறது. ''பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு போகுமோ?''

# இந்தியா கொடுத்த வாய்ப்பை நான் கெட்டியாகப் பற்றிக் கொண்டேன்

- ஜே. ஆர்.

(நேற்றைய தொடர்ச்சி)

கே: சட்டக்கல்லூரியில்நீங்கள் ஆற்றிய உரையில் நீங்கள் இந்தியாவின் உதவியைக் கோரியதிற்கும் இந்திய அமைதிப்படை இங்கு வந்ததை நியாயப்படுத்துவதற்கு இந்த நாட்டின் வரலாற்று நிகழ்வுகளை எடுத்துக் கூறி இந்நாட்டு மன்னர்கள் தென்னிந்தியத் தலையீட்டினை வரவழைத்த எத்தனையோ தடவைகளை சுட்டிக்காட்டினீர்கள்... இதன் மூலம் நீங்கள் எதனைச் சுட்டிக் காட்டுவதற்கு அல்லது அழுத்துவதற்கு முயன்றீர்கள்?


ஜே. ஆர்: வெளிநாட்டுஉதவியைக் கோராத எந்த ஒரு நாடும் - அது முடியாட்சியாக இருந்தால் என்ன ஜனநாயக நாடாக இருந்தால் என்ன, பண்டைய நாடாக இருந்தால் என்ன நவீன நாடாக இருந்தால் என்ன - இல்லை... பிரித்தானியாவை எடுத்துக் கொள்ளுங்கள். மிகப் பழைமை வாய்ந்த பாராளுமன்ற ஜனநாயகநாடு அது .. அதுகூட தன்னைப் பாதுகாக்கும் படி அமெரிக்காவைக் கெஞ்சவில்லையா? 1962 இல் இந்தியாவும் இவ்வாறு அமெரிக்காவிடம் உதவி கோரியது. சீனாவிற்கு எதிராக பயன் படுத்துவதற்காக குண்டு வீச்சு விமானங்களை அனுப்பியது.

கே: ஆனால் அதுஒரு வெளிநாட்டு எதிரிக்கு எதிராகத்தானே... ஹிட்லருடைய ஜேர்மனி ஐரோப்பாவை அதிவேகமாகக் கைப்பற்றிக் கொண்டு சென்றது... ஜேர்மன்இராணுவம் எத்தனையோ நாடுகளைக் கைப்பற்றியிருந்தது. நீங்கள் குறிப்பிட்ட வரலாற்றில் அச்சுறுத்தல் உள்நாட்டிலிருந்துதானே, உள்நாட்டில் தோன்றியபிணக்குகளிலிருந்துதானே எழுந்தது. தனது சுதந்திரத்தையும், இறைமையையும், நிலப்பரப்பையும் பாதுகாக்கத்தானே இங்கிலாந்து உதவி கோரியது..?

ஜே. ஆர்: நானும் அவ்வாறுதான் செய்தேன். இந்த எதிரியும் அதைப்போன்று மிகப் பயங்கரமான எதிரி. மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் தனது நிலையை தனது அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதுவே அரசியலின் சாராம்சம்... ஜனநாயக முறையில் அதிகாரத்தைப் பெறுவது அதனை வைத்துக்கொள்வது அதனை இழந்தால் மீண்டும் அதனைப் பெற்றுக் கொள்வது, இருந்த அதிகாரத்தை இழந்து விட்டு மீண்டும் அதைப் பெற முயற்சிப்பதை விட தேவைப்படின் பிசாசின் உதவியினாலும் கூட அதனை தொடர்ந்து வைத்திருப்பது விவேகமானது.

கே; ஆனால் உங்களுடைய அதிகாரத்திற்கு, ஜனாதிபதிப் பதவிக்கு ஆபத்து எதுவும் இருக்கவில்லையே?

ஜே. ஆர்; ஏன் இல்லை. இதேபோன்ற உள்நோக்கங்களைக் கொண்ட ஜே. வி. பி. தெற்கில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. ஜனநாயக தலைவர்களை அவர்கள் கொல்ல முயன்றார்கள். ஒரு சதி ஏற்படுவதற்கான ஆபத்து இருந்தது. சில இலங்கையர் சில வெளிநாட்டுத் தூதுவர்களை அணுகி ஒரு சதிப்புரட்சி ஏற்பட்டால் அவர்களுடைய நிலைப்பாடு என்னவாக இருக்கும் என அறிய முயன்றார்கள். தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் தாம் ஆதரிப்பார்கள் என அவர்கள் எல்லோரும்பதிலளித்தார்கள்.




அவர்களுடைய பிரதான நோக்கம் இந்தியாவினுடைய நோக்கம் என்ன என்பதை அறிந்துகொள்வதே. இந்தியா என்னையே மிகப் பலமாக ஆதரித்தது.

கே: ரொனி டீ மெல்லா உங்களுக்கு அதைச் சொன்னவர்?

... ஏனென்றால் காலிமுகத்திடலில் நாம் வழக்கமாக உலாவும்போது சிவிலியன்களும் இராணுவத்தினரும் சம்பந்தப்பட்ட சதி ஏற்படும் ஆபத்து உண்டு என அவர் எனக்குச் சொன்னார்.

ஜே. ஆர். இல்லை. யாழ்ப்பாணத்தையும் அதற்குப்பின்னர் குடாநாட்டையும் கைப்பற்றுவதற்கும் முழு அளவிலான யுத்தத்திற்கு வேண்டிய பணம் இல்லை என அவர் எனக்குச் சொன்னார். மானியங்கள் எல்லாவற்றையும் நீக்கி அபிவிருத்தி வேலைகள் எல்லாவற்றையும் நிறுத்தி சம்பளங்களைக் குறைத்து கண்டிப்பான நாணயக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி வரிச் சலுகைகள் போன்றவற்றை நிறுத்தி இவைபோன்றவற்றைச் செய்யவேண்டும் என அவர் சொன்னார். இந்த நிலையில் டிக்சிற்றும் பின்னர் ராஜீவ் காந்தியும் விடுதலைப் புலிகளும் மற்றெல்லாப் பிரிவினைவாதக் குழுக்களும் வடகிழக்கு மாகாணசபையை ஏற்று ஆயுதங்களைக் கீழே வைத்து ஜனநாயக ஓட்டத்தில் இணைய தயாராக இருக்கின்றார்கள் எனக் கூறினார்கள். வடகிழக்கு இணைப்பே ஒரு பிரச்சினையாக எனக்குப் பட்டது. ஆனால் அது தற்காலிகமாக, ஓராண்டிற்காக மட்டுமே இருந்ததாலும் அது பற்றி மக்களுடைய கருத்தை அறிவதற்கு வாக்கெடுப்பு நடைபெறவிருந்ததாலும் நான் இந்த வாய்ப்பை கெட்டியாகப் பற்றிக்கொண்டேன். ஏன் அவ்வாறு நான் செய்திருக்கக்கூடாது. பண்டா செல்வா ஒப்பந்தம் நிரந்தர இணைப்பிற்கு வழிவகுத்தது. இது ஓராண்டிற்கு மட்டுமே இணைப்பு. அதன் பிறகு கிழக்கு மாகாண மக்கள் அந்த இணைப்பைத் தொடர்வதா பிரிவதா என்பதைத் தீர்மானிப்பார்கள்... இந்த ஒரு சலுகைக்காக ஒரு தற்காலிக இணைப்பிற்காக கொலைகள் நிறுத்தப்பட்டு இராணுவ நடவடிக்கைகளில் செலவிட்ட பணத்தை மீதப்படுத்தி நாட்டை புனர்நிர்மாணம் செய்து புனருத்தாரணத்திற்கு எமக்கு வழங்கப்பட்ட இந்த உதவியைக் கொண்டு...இவையெல்லாம் ஏற்படக் கூடிய வாய்ப்புகளை ஒரு மடையன் தான் நிராகரிப்பான். ஆகவே, நான் சொல்கிறேன் தற்காலிக ஓராண்டு இணைப்பை எதிர்ப்பவர்களே ஒப்பந்தத்தை விமர்சிப்பதற்கு தார்மீக அருகதை உடையவர்கள் வேறொருவரும் அல்ல. இவையும் வேறு சலுகைகளும் முன்பு நடைபெற்ற கட்சிக்கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டு டிசம்பர் 1986இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. □

# கார்க் குண்டு வெடிப்பில் பிரிட்டிஷ் எம். பி. பலி

(லண்டன்)

பிரிட்டிஷ் ஆளும் கன்ஸர்வேட்டிவ் கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவரும் முன்னாள் அமைச்சருமான திரு. டேவிட் கவ் கார்க் குண்டு வெடிப்புக்குப் பலியானார்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு இச் சம்பவம் இடம்பெற்றது. ஐரிஸ் விடுதலைப் போராளிகளே இக் குண்டு வெடிப்புக்குக் காரணம் என்றுசந்தேகிக்கப்படுகின்றது.

பிரிட்டிஷ் பிரதமமந்திரி மாக்கிரட் தட்சரின் நெருங்கிய சகாவான கவ் 1985 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆங்கில ஐரிஸ் உடன்படிக்கையைத் தொடர்ந்து மந்திரி சபையில் இருந்து விலகினார். எதையுமே வெளிப்படையாகக் கண்டிக்கும் கவ் அண்மையில் ஐ. ஆர். எ. தீவிரவாதிகளை வெளிப்படையாகக் கண்டித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

டேவிட் கவ் மரணத்தைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதம மந்திரி மாக்கிரட் தட்சர் நாட்டிற்கும், பாராளுமன்றத்திற்கும் இது பெரும் இழப்பு எனவும் தெரிவித்துள்ளார்.

# வளைகுடா பகுதியில் அமெ. கடற்படை நடமாட்டம்

(பாக்தாத்)

அமெரிக்க கடற்படைக் கப்பல்களின் நடமாட்டம் வளைகுடா பகுதியில் அதிகரித்துள்ளது.

முன்னர் ஈராக் — ஈரான் யுத்தம் நடைபெற்றபோது இவ்வாறு அமெரிக்க கடற்படை இங்கு நடமாடியது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கிற்கும் - குவைத்துக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை அடுத்தே இந்த நடமாட்டம் அதிகரித்துள்ளது.

# தமிழீழப் போராட்டம் சிலரது போராட்டமல்ல

# சகல தமிழ்ப்பேசும் மக்களின் போராட்டம்

(அலுவலக நிருபர்)

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு சில இளைஞர்களிலோ - குறிப்பிட்ட சில மக்களிலோ தங்கியிருக்கவில்லை. இந்தப்போராட்டம் தமிழீழப் பிரதேசத்தில் வாழும் சகல தமிழ்ப் பேசும் மக்களுக்கும் பொதுவானது. ஆதலால் எல்லோரும் தங்களாலான முழு பங்களிப்பையும் இந்த விடுதலைப் போராட்டத்திற்குச் செலுத்த முன்வரவேண்டும்''

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) மேற்குறிப்பிட்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வலி. வடக்குப் பிரதேச சிற்றூர் -வட்ட அவைஉறுப்பினர்களின் தமிழீழ மீட்புநிதிக்கான கூட்டம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. மகேந்திரராசா இக்கூட்டத்தில்கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இளைஞர்கள்- முதியவர்கள் என்றோ, ஆண்கள் - பெண்கள் என்றோ, ஏழை - பணக்காரன் என்றோ வித்தியாசம் பாராட்டாது சகல தரப்பினரும் மன உறுதியுடன் முன்வந்து காலம் தாழ்த்தாது செயலாற்ற வேண்டும் என்றும் சொன்னார்.

''எங்களுக்கு எப்பவும் சாவு நேரலாம். கோழையாகச் சாவதைவிடவீரமாகப்போராடிச் சாவது மேலானது என்று குறிப்பிட்ட திரு. மகேந்திரராசா வியாழன்-வெள்ளி; அட்டமி -நவமி பார்த்து எதிரி குண்டு வீசுவதில்லை என்றும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இதுவரை 1, 500க்கு மேற்பட்ட போராளிகள் வீரமரணமடைந்திருக்கிறார்கள்; பல ஆயிரக்கணக்கான எம்மக்கள் பலியாகியிருக்கிறார்கள். லட்சக்கணக்கான மக்களகதிகளாக்கப்பட்டுள்ளார்கள்; பலகோடிக்கணக்கான உடைமைகள் நாசமாக்கப்பட்டுள்ளன. குறிப்பாகப் பட்டினிச் சாவையும் எதிர்நோக்கியுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

''எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றி இப்பொழுது மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள் என்பதை அண்மைக் காலமாக அவர்கள் அளித்துவரும் உதவிகள் மூலம் தெரியவருகிறது.

ஆனாலும் இன்னும்பலர்மறைமுகமாக இருக்கிறார்கள். இவர்களும் எமது போராட்டத்தில் பங்காளராகச் சேர்ந்துகொண்டால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்'' என்றும் அவர் சொன்னார்.

மற்றும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. ராஜன், வலிகாமம் பிரதேசப்பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (மா)

## தமிழ் பொலிஸார்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மளவிலுள்ளனர். பொலிஸ்காரர்கள் பெரும்பாலும் தமிழரும் முஸ்லிம்களுமாவர்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளால் பதினேழாம் திகதி கைதுசெய்யப்பட்ட தமிழ் முஸ்லிம் பொலிஸார் அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து கோட்டையில் இருந்த தமிழ் முஸ்லிம் பொலிசார் விடுதலைப் புலிகளிடம் சரணடைய விரும்பியதாகத் தெரியவருகின்றது.

இதனாலேயே ஆத்திரம் அடைந்த சிங்கள இராணுவத்தினர் ஐந்து தமிழ், முஸ்லிம் பொலிசார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிகின்றது.

அத்தோடுயாழ். கோட்டையில் இருக்கும் தமிழ் முஸ்லிம் பொலிசார் திட்டமிட்டு சிங்கள இராணுவத்தினரால் பலியாக்கப்படுவதாகத் தெரிகின்றது.

## ப. நோ. கூ. சங்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை முற்பகல் 10,00 மணிக்கு நல்லூர் பல. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட கூட்டுறவுப் பகுதி கேட்டுள்ளது.

## கருணாநிதியின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டில்லியில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமையே முதல்வரின் பயணம் ஒத்திவைப்புக்கான காரணமென்று கூறப்பட்டது

# மரண அறிவித்தல்

## இளையதம்பி ஈஸ்வரபாதம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

சரசாலையைச் சேர்ந்தவரும் கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் இளையதம்பி ஈஸ்வரபாதம் நேற்றுக் காலை காலமானார்.

இவர் வசந்தரூபாவின் அன்புக் கணவரும், ஈஸ்வரபவானி, ரூபரஞ்சனி, சரவணபவன் (நிர்வாக இயக்குனர் - உதயன்/சஞ்சீவி நிறுவனம் - ஷப்றா, யாழ்ப்பாணம்), ஸ்ரீரஞ்சனி, முகுந்தன் (லண்டன்), ஸ்ரீதரன் (லண்டன்), வசந்தினி (ஹில்ஸ் கலர் போட்டோ-கொழும்பு), கீதா கேதீஸ்வரி (சவூதி), நவநீதன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும்; காலஞ்சென்ற சோமசுந்தரம், பாலசுப்பிரமணியம் (நிர்வாக இயக்குனர் - ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்), யசோதை, சக்திதாசன் (ஓமான்), விமலாதேவி (லண்டன்), பிரேமினி (லண்டன்), ராஜேந்திரன் (ஹில்ஸ்கலர் போட்டோ- கொழும்பு), ஸ்ரீகாந்தா (சவூதி) ஆகியோரின் மாமனாரும்; காலஞ்சென்ற நவரட்ணராஜா இராசமணி, நடராசா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும்; காலஞ்சென்ற நல்லம்மா, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, மணிமேகலை (அவுஸ்திரேலியா), திருமதி ரஞ்சிதம் ராஜரத்தினம் (சிங்கப்பூர்), லீலா ரங்கநாதன் (மலேசியா), காலஞ்சென்ற அமலரதி மகேஸ்வரன் (மலேசியா), மதனபூபாலன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்; ரமணன், உமையாள், சிந்தியா, அபிராமி, சித்ரூபி, பிரகதீபன் ஆகியோரின் அருமைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது கொக்குவில் நந்தாவில் சம்பியன் லேன் இல்லத்தில் இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

யாழ்ப்பாணம். ஈ. சரவணபவன்

(B/1302)

## குடும்பத்திற்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் வெளியிட்ட அறிக்கை வருமாறு;

எமக்குக் கிடைக்கப்பெற்ற உணவு வகைகள் பொதுமக்களின் தேவையினை பூர்த்தி செய்ய முடியாதுள்ளது.

எனவே எமக்கு இதுவரை கிடைத்தவையும், கிடைக்கப் பெறவுள்ளவையும் சேர்த்து கீழ்க்காணும் முறைப்படி மட்டுப்படுத்தி விநியோகிக்கவுள்ளோம். தேவையான அளவுப் பொருள்கள் பெறும் வரை கீழ்க்காணும் முறையில் அவை விநியோகம் செய்யப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

மா—ஒரு குடும்பத்திற்கு ஒரு கிலோ, அரிசி ஒருகுடும்பத்திற்கு ஒருகிலோ, சீனி-குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு நூறு கிராம் மேற்கூறிய விகிதத்தில் பங்கீட்டு அட்டையினை அடிப்படையாகக் கொண்டு இந்த விநியோகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும். (ம)

## லைபீரியா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற வகையில் இவர்களது முகாமிற்குள் சென்ற இராணுவம் இவர்களைச் சுட்டதாகவும் தப்பிய அகதிகள் தெரிவித்தனர்.

லைபீரியாவின் பழங்குடி மக்கள் 2000 பேர் இவ்வகதி முகாமில் இருந்ததாகவும் இதில் 600 பேர் இறந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

''அறிவற்றதோர் பயங்கரவாதச் செயல் இது'' என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கண்டனம் தெரிவித்தார்.

## 60 க்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேட் ஆகியோரது வீடுகள் பலத்த சேதம் அடைந்தன. சிலைகள் தப்பிவிட்டன.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயவீதியில் சேதம் அடைந்தது.

குருநகர் முதலாம் குறுக்கு வீதியில் இரவீந்திரன், துரைச்சாமி குணம், அ. செபஸ்தியன் ஆகியோரதுவீடுகளும், இரண்டாம் குறுக்கு வீதியில் றோமான்றோய், துரைராசா ரவி, ச. சேவியர் ஆகியோரது வீடுகளும் பலத்த சேதம் அடைந்துள்ளன.

இவைதவிரஅன்றையகுண்டு வீச்சில் மேலும் ஐம்பதுக்கும் அதிகமான வீடுகள் சேதங்களுக்குள்ளாகின.

குண்டு வீச்சு நேரத்தில் அப்பகுதியில் எவரும் இல்லாததால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

குருநகரில் இருந்து இடம் பெயர்ந்த அகதிகளில் சிலர் தொடர்மாடியில் தஞ்சமடைந்துள்ளனர். (21)

## டாக்டர்கள் கூட்டம்

(மானிப்பாய்)

மானிப்பாய் போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் டாக்டர்களின் கூட்டம் இன்று காலை நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் இன்றைய நிலைபற்றி ஆராயப்படவுள்ளதாக வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் செல்வி சண்முகம் தெரிவித்துள்ளார்.

## சிங்கள

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்களை எடுப்பதற்காக லொறி ஒன்றில் மிளகாய்ச் செத்தல் ஏற்றிச்சென்ற நான்கு முஸ்லிம்களை மதவாச்சி செல்லும் வழியில் யக்காவிலில் இராணுவ முகாமில் வைத்து இராணுவத்தினர் தடுத்து நிறுத்தி கைதுசெய்து ஊர்காவல் படையினரிடம் ஒப்படைத்தனர்.

ஊர்காவல் படையினர் நான்கு பேரையும் கொலை செய்து பொருட்களைக் கொள்ளையடித்துவிட்டு லொறிக்கு தீயிட்டு எரித்துள்ளனர்.

இதன் காரணமாக அச்சமடைந்த பேப்குத்தான், காட்டு மாங்குளம், சின்னச்சிப்பிக்குளம், ஆனைவிழுந்தான், கல்லூர் ஆகிய பகுதிகளில் வசித்த முஸ்லிம் மக்கள் புத்தளம் பகுதிக்கு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். (ம)

## திங்கள் வந்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லையில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு மா ஏற்றிவரும்.

**உணவுப் பொருள்களுடன் பயணிகள் கப்பல்**

யாழ் மாவட்டத்தில் இருந்து பயணிகளை ஏற்றிச் செல்வதற்கென கொழும்பில் இருந்து பயணிகள் கப்பல் ஒன்றை அரசு அனுப்பிவைத்துள்ளது. இக்கப்பல் நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து புறப்பட்டுள்ளது. இக் கப்பல் யாழ்.மாவட்டத்திற்கு மேலும் 180 தொன் உணவுப் பொருள்களுடன் தபால்பொதிகளையும், மருந்துகளையும் ஏற்றி வருகிறது.

இக்கப்பல் திரும்பிச் செல்லும்போது வெளிநாட்டுக் கடவுச்சீட்டு உடைய பயணிகளை கொழும்பிற்கு ஏற்றிச் செல்லும்.

**யாழ். மாவட்டத்திற்கு மேலும் ஒரு பெரிய கப்பலில் உணவு**

இரண்டு கப்பலில் உணவுப் பொருள்கள் வந்தாலும் அவை யாழ் மாவட்டத்திற்கு ஒரு நாளைக்குக் கூடப் போதாது. எனவே யாழ் மாவட்டத்திற்கு தற்போதைக்கு தேவைப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை நிறைவு செய்யும் வகையில் ஒரு பெரிய கப்பலில் உணவுப் பொருள்களை உடன் அனுப்பி வைக்குமாறு இலங்கை அரசை யாழ்.அரசாங்க அதிபர் வற்புறுத்தி வருகின்றார். இதற்காக வெளிநாட்டுக் கப்பல் ஒன்றை இலங்கை அரசு ஒழுங்கு செய்து வருவதாகக் கூறப்படுகிறது. (ம)

## மூதாட்டி மானபங்கம்

(வவுனியா)

செட்டிகுளத்தில் கடந்த 30 ஆம் திகதி எழுபத்தி ஐந்து வயது மூதாட்டியை நான்கு சிங்கள ராணுவத்தினர் மானபங்கப்படுத்தியுள்ளனர். (ம)

## ஹெலி தாக்கி ஒருவர் மரணம்

கள்ளியன்காடு, முத்திரைச்சந்தைப் பகுதிகளிலுள்ள குடிமனைகளை நோக்கி ஹெலிக்கொப்டரிலிருந்து கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார். மற்றுமொரு வயோதிபர் படுகாய முற்றார்.

நேற்றுக்காலை இச் சம்பவம் இடம்பெற்றது.

## மன்னார்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்புலிகள் தரப்பில் உதயகுமார் என்னும் போராளி வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## அகதிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாற்பதாயிரம் அகதிகளையும் இத்தொகை மிஞ்சிவிட்டதாக சென்னை செய்தியாளர்கள் தெரிவித்துள்ளதுடன்; நேற்று 1350பேர் இராமேஸ்வரம் வந்தடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஈரோஸ்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர் திரு. இ. பரராஜசிங்கம் எழுதிய கடிதத்தில் ''இனப்படுகொலை நடைபெறுவதைக் கையாலாகாதவர்களாக நாம் கைகட்டி நின்று பார்த்துக் கொண்டிருக்க விரும்பவில்லை'' என்று குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே!

## துரிதமாக

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்கப்பல் முல்லைத்தீவிலிருந்து ஆறு மைல் தூரமான முள்ளி வாய்க்கால் ஆழக் கடலில் நங்கூரமிடப்பட்டிருந்ததுடன் அங்கிருந்து படகுகள்மூலம் கரைக்கு சாமான்கள் கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கது. (58)

## படையும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டான் (வயது 35) கல்லூர் எம். மன்சூர்(கல்லூர்),நாகூர் சலாவுதீன் (வயது 20) சின்னச்சிப்பிக்குளம், எம். நாகூர் கனீம் (வயது 42) கல்லூர், ஏ. புஸ்டான்(வயது25)ஆனைவிழுந்தான் என்பவர்கள் பலத்த அடிகாயங்களுக்கும், வெட்டுக்காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இவர்களில் ஆனைவிழுந்தானைச் சேர்ந்த புஸ்டான் என்பவர் முகாமில் இருந்து தப்பிவிட்டார்.ஏனையோர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டபின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (மு)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.